# டெங்கு நோயை தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்குமான துரித தொடர் செயற்திட்டம்


தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு

சுகாதார, போசணை மற்றும் சுதேச ருத்துவத்துறை அமைச்சு

டெங்கு ஒழிப்பு தொடர்பான

ஜனாதிபதி செயலணி

## டெங்கு நோயைக் கட்டுப்படுத்தல் மற்றும் தடுப்பதற்கான திட்டம்


| தொடர் இலக்கம | நிறுவன | பக்க இலக்கம் |
| --- | --- | --- |
| | பின்னணி | 1 |
| 1. | அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் வணக்கஸ்தலங்கள் | 3 |
| 2. | பாடசாலைகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் | 5 |
| 3. | வீட்டுச் சூழல் | 7 |
| 4. | கட்டிட நிர்மாண ஸ்தலங்கள் | 9 |
| 5. | மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன்பிடிப் படகுகள் | 11 |
| 6. | ஊடகங்கள் | 12 |

## மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களின் செய்தி

அடர்ந்த காடுகளை வெட்டவெளியாக்கியும், கொடிய ஜீவராசிகளை கட்டுப்படுத்தியும் கட்டியெழுப்பப்பட்ட மனித நாகரிகமானது, விண்வெளிக்கு பயணம் மேற்கொள்ளும் இக் காலத்தில் இலங்கையர்களான நாம் ஒரு சிறு நுளம்பின் வாழ்க்கை சக்கரத்தினால் கட்டுப்பட்டிருப்பதா என்ற தீர்மானம்மிக்கவொரு சவால் தற்போது எமக்கு முன்னால் காணப்படுகின்றது.

அரச வைத்தியசாலைகள் டெங்கு நோயாளர்களினால் நிரம்பிவழியும் அளவிற்கு டெங்கு நோய் தீவிரமடைந்துக் காணப்படும் இவ்வேளையில் அதனை எமது பிரச்சினையல்ல எனக்கருதி செயற்பட எம்மால் முடியாது.

டெங்கு நோய் சுகாதாரப் பிரச்சினை மட்டுமன்றி, அதுவொரு கலாச்சார பிரச்சினையுமாகும். நாம் வெளியேற்றும் கழிவுப் பொருட்களை உரியவாறு வகைப்படுத்தி அகற்ற எம்மால் முடியவில்லையாயின், எமது வீடுகளிலும், வீட்டுத்தோட்டங்களிலும் நுளம்பு பெருகக்கூடிய இடங்களை அழிக்க முடியவில்லையாயின், மாநகர சபையின் பெருந்தெருக்களில் நுளம்பு பெருகுவதற்கு இடமளிப்போமாயின், நாகரிக வளர்ச்சிபெற்ற மனிதர்களாக எம்மை நாம் கருதமுடியாது.

டெங்கு நோய் தொடர்பான சமூகப் பொறுப்பு எமக்கு காணப்படுகின்றது. இவ்விடயம் தொடர்பில் எம் அனைவருக்கும் கடமையும், பயிற்சி பெறவேண்டிய கட்டாயமும் காணப்படுகின்றது. டெங்கு நோயைக் கட்டுப்படுத்தல் மற்றும் தடுத்தல் தொடர்பான இந்த திட்டம் அக்கடமையை எமக்கு மீண்டும் மீண்டும் நினைவூட்டுவதாகவும் அமைகின்றது. அந்நினைவூட்டலைத் தெளிவாக புரிந்துக்கொண்டு அனைவரும் தமது பொறுப்புக்களை சிறப்பாக நிறைவேற்றுவார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன்.

**மைத்ரிபால சிறிசேன**

**ஜனாதிபதி**

**இலங்கை ஜனநாயக சோசலி‘ குடியரசு**

# பின்னணி

டெங்கு நோயானது பிரதான சுகாதார பிரச்சினையாக தற்போது காணப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டு ஜுன் மாதமளவில் 68,053 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், 206 மரணங்கள் பதிவாகியுள்ளன (மரண விகிதம் 0.3மூ). தென்மேல் பருவப்பெயர்ச்சி மழைக் காரணமான எதிர்வரும் சில மாதங்களுக்குள் ஏற்படக்கூடிய டெங்கு ஆட்கொல்லி நிலையைக் கட்டுப்படுத்துவதற்கு டெங்கு நோய் சிகிச்சை மற்றும் அதனை தடுப்பதற்காக செயற்படும் நிறுவனங்கள் துரித டெங்கு ஒழிப்பு முறையொன்றினை பின்பற்றுதல் அவசியமாகும்.

தற்போது காணப்படும் நுளம்புக் குடம்பிகளைப் பற்றிய ஆய்வறிக்கைகளின்படி, தேவையற்ற வெளியே வீசப்படும் பாத்திரங்களிலேயே 40 சதவீதமான டெங்கு நுளம்புகள் பெருகுவதனால் கழிவுகளை முறையாக வெளியேற்றும் முறையொன்றினை பின்பற்ற வேண்டியது அவசியமாகும். மேலும், நிர்மாணப்பணிகள் நடைபெறும் கட்டிடங்கள், பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் நுளம்புகள் பெருகுவதற்கான ஏராளமான வாய்ப்புகள் காணப்படுவதனால் அவற்றைத் தடுப்பதற்கான முறையொன்றை இனங்காண வேண்டியதும் மிக அவசியமாகும். டெங்கு நோயினால் ஏற்படக்கூடிய மரணங்களை குறைப்பதற்கு தற்போதுள்ள விஞ்ஞான ரீதியான தரவுகளின் அடிப்படையில் பின்வரும் குறிக்கோள்கள் முன்வைக்கப்படுகின்றன.

## குறிக்கோள்கள்


01. நோயாளர்களை முன்கூட்டியே இனங்காணல் மற்றும் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குதலை மேலும் வலுப்படுத்தல்

02. ஆட்கொல்லி நிலையை தடுப்பதற்கு காணப்படும் வாய்ப்புக்களை மேலும் வலுப்படுத்தல்.

ஏனைய பல சுகாதார சுட்டிகள் உயர் மட்டத்தில் காணப்பட்டபோதிலும் டெங்கு நோய் ஆட்கொல்லி நிலையில் காணப்படுவதனால், அதனை தடுப்பதற்கான வழிமுறைகளை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்படுகின்றது.

இந்த குறிக்கோள்களை அடைவதற்கு மாகாண மட்டத்திலிருந்து கிராமிய மட்டம் வரை பரம்பலடைந்த குறித்த முறையொன்று டெங்கு ஒழிப்பிற்கான ஜனாதிபதி செயலணியினால் நிறுவப்படுதல் அவசியமாகும்.

## டெங்கு ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலகத்தின் ஒழுங்கமைப்பு




* கல்வி, சுற்றாடல், பாதுகாப்பு, அரச நிர்வாகம், உள்;ராட்சி மற்றும் மாகாண சபைகள், அனர்த்த முகாமைத்துவம், நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சு.

டெங்கு ஒழிப்புக்கான மிகவும் செயற்பாடுடைய குழுவாக கிராமிய குழுக்கள் அமையவேண்டும், அக் குழுவின் செயற்பாடுகள் பிரதேச சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் மற்றும் பொது சுகாதார பரிசோதகர் ஆகியோரின் ஆலோசனைகளின்படி, கிராம உத்தியோகத்தரின் ஒருங்கிணைப்பில் செயற்படுத்தப்படல் வேண்டும்.

பிரதேச செயலக பிரிவுகளில் பிரதேச செயலாளரினதும், உள்;ராட்சி நிறுவனத்தின் மேயர் ∴ தலைவரின் தலைமையில் இச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படல் முக்கியமாகும்.

| நிறுவனங்களில் டெங்கு நுளம்புகள் பரவுவதைத் தடுப்பதற்கான திட்டங்கள் | | |
|---|---|---|
| செயற்பாடுகள் | பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்கள் | அடைய வேண்டிய இலக்குகள் |

| | | |
|---|---|---|
| 1. டெங்கு ஒழிப்பு செயற்திட்டத்தை ஜுன் மாதம் முதல் மூன்று மாதங்களுக்கு தொடர்ச்சியாக செயற்படுத்தல்<br><br>2. வாரந்தோறும் குறித்தவொரு தினத்தில் சகல நிறுவனங்களிலும் (அரச மற்றும் தனியார்), வணக்கஸ்தலங்களிலும் ஒரு மணித்தியாலம் வீதம் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபடல்.<br><br>அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் வணக்கஸ்தலங்கள்<br><br>▪ அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் வணக்கஸ்தலங்களின் சுற்றுச் சூழலிலுள்ள நுளம்பு பெருகத்தக்க இடங்களை வாரந்தோறும் குறைந்தபட்சம் குறித்தவொரு தினத்திலேனும் (பொருத்தமான நேரத்தில்) ஒரு மணித்தியாலம் வீதம் சகல உத்தியோகத்தர்களின் பங்களிப்புடனும் மேற்பார்வை செய்தல்.<br><br>- அலுவலகம் மற்றும் அதன் சுற்றுச் சூழலை வலயங்களாகப் பிரித்து உரிய அதிகாரிகளுக்கு பொறுப்புக்களை பகிர்ந்தளித்தல்.<br><br>- கழிவு முகாமைத்துவம் தொடர்பாக நிலையான தீர்வொன்றை வழங்குதல்.<br><br>✓ கழிவுகளை வகைபிரித்தல் தொடர்பாக சகல உத்தியோகத்தர்களையும் அறிவூட்டல்.<br><br>✓ நிறுவனத்திற்கு பொலித்தீன் கொண்டு வருதலைத் தவிர்த்தல்<br><br>✓ கழிவுகளை குறைக்க நடவடிக்கை | சகல அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், உள்;ராட்சி நிறுவனங்கள், மகாவலி அதிகார சபை மற்றும் அமைச்சு, சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு | சகல அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் வணக்க ஸ்தலங்களை நுளம்புகள் பெருகாத வண்ணம் பேணுதல். |

| | | |
|---|---|---|
| எடுத்தல்.<br>✓ சிற்றுண்டிச்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் உக்கலடையும் மற்றும் உக்கலடையாத கழிவுகளையும், கழிவு நீரையும் உரியவாறு வெளியேற்றுதல்.<br>✓ கழிவுகள் உரியவாறு வகைப்படுத்தப்படுகின்றனவா? என மேற்பார்வை செய்வதற்கான குழுவொன்றினை நியமித்து அது தொடர்பாக அறிக்கை தயாரித்தல்.<br>▪ அலங்காரத்திற்காக அமைக்கப்பட்டுள்ள தடாகங்களில் நுளம்புக் குடம்பிகளை உணவாக உட்கொள்ளும் மீன்களை வளர்த்தல்<br>▪ ஜனாதிபதி அவர்களின் சுற்றுநிருபத்திற்கு ஏற்ப பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்கு மாதாந்த அறிக்கை சமர்பித்தல்<br>▪ தொழில்நுட்ப ஆலோசனைகளுக்காக பிரதேசத்தின் பொது சுகாதார பரிசோதகரையோ அல்லது சுகாதார மருத்துவ அதிகாரியையோ சந்தித்தல்.<br>▪ நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படும் சூழல் தொடர்பாக கூடிய கவனம் செலுத்துதல், பொறுப்பான உத்தியோகத்தர், சுகாதார மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தருடன் மேற்பார்வை செய்தல். | | |

<table>
<tr><th colspan="3">பாடசாலை மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான திட்டம்</th></tr>
<tr><th>செயற்பாடுகள்</th><th>பொறுப்பான நிறுவனங்கள்</th><th>அடையவேண்டிய இலக்குகள்</th></tr>
<tr><td>பாடசாலை<br>1. டெங்கு ஒழிப்பு செயற்திட்டத்தை ஜுன் 01 ஆம் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு தொடர்ச்சியாக அமுல்படுத்துதல்.<br>2. ஒவ்வொரு வாரமும் குறித்த நாளொன்றில் அனைத்து பாடசாலைகளிலும் (அரச மற்றும் தனியார்) ஒரு மணித்தியாலம் தமது இடத்தை சுத்தம் செய்தல்.<br>➢ அனைத்து பாடசாலை வளாகங்களிலும் நுளம்புகள் பெருகும் இடங்களை ஒவ்வொரு வாரமும் ஆகக் குறைந்தது குறிப்பிட்ட நாளொன்றில் ஒரு மணித்தியாலம் அனைத்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பங்கேற்புடன் பரிசீலித்தல்.<br>(உ+ம்): வெள்ளிக்கிழமை காலை 11.00 தொடக்கம் 12.00 வரை)<br>✓ பாடசாலை டெங்கு ஒழிப்பு குழுக்களை நிறுவி பலப்படுத்துதல்.<br>✓ வகுப்பு நேர அட்டவணையில் குறிப்பிட்ட மணித்தியாலத்தை உள்ளடக்குதல்.<br>✓ பாடசாலை சுற்றாடலை வலயங்களாக பிரித்து, உரிய</td><td>கல்வி அமைச்சு, சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு</td><td>அனைத்து பாடசாலைகளையும் டெங்கு நுளம்புகள் பெருகாத பாடசாலைகளாக மாற்றுதல்.<br><br>ஒவ்வொரு வாரமும் குறித்த நேரத்தில் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களை பரிசோதிக்கும் பாடசாலைகளாக மாற்றுதல்.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| வகுப்புக்களுக்கு பொறுப்பளித்தல்.<br>✓ ஒவ்வொரு வாரமும் குறித்த நாளொன்றில் ஒரு மணி நேரம் பாடசாலையை சுத்தம் செய்தல்.<br>✓ பாடசாலை டெங்கு ஒழிப்பு குழுவினால் நாளாந்த மேற்பார்வை செய்தல்: வாராந்த அறிக்கைகளை அதிபரிடம் வழங்குதல்.<br>✓ அனைத்து அதிபர்களும் மாதாந்த அறிக்கையை வலய பணிப்பாளருக்கும், உரிய சுகாதார மருத்துவ அலுவலருக்கும் வழங்குதல். | | |

| வீட்டு சுற்றாடலில் டெங்கு பெருகுவதனை தடுக்கும் திட்டம் | | |
|---|---|---|
| **செயற்பாடுகள்** | **பொறுப்பான நிறுவனங்கள்** | **அடைய வேண்டிய இலக்கு** |
| 1. டெங்கு ஒழிப்பு செயற்திட்டத்தை ஜுன் 01 ஆம் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு தொடர்ச்சியாக அமுல்படுத்துதல்.<br><br>**<u>வீட்டு பரிசோதனை</u>**<br><br>➢ வீட்டிலுள்ள அனைவரும் வாரத்தில ஒரு நாள் குறித்த நேரத்தில் நுளம்பு பெருகும் இடங்களை பரீட்சித்து, அகற்றுதல்<br><br>➢ சமூக சுகாதார செயற்திட்டத்தை பலப்படுத்துதல்.<br>- அனைத்து கிராம அலுவலர்கள், சமூக தலைவர்களுடன் இணைந்து செயற்பாட்டு சுகாதார குழுவை அமைத்தல்.<br><br>➢ கழிவு முகாமைத்துவத்துக்கான நிலையான தீர்வுகளை வழங்குதல்.<br>- கழிவு வகைப்படுத்தல் தொடர்பில் அனைத்து குடியிருப்பாளர்களையும் தெளிவுபடுத்துதல்.<br>- பொலித்தீன் பயன்பாட்டைக் குறைத்தல்.<br>- கழிவுகளை குறைத்தல்.<br>- கழிக்கப்பட்ட உக்கும், உக்காத கழிவுகள் மற்றும் கழிவுநீரை சரியான முறையில் அகற்றுதல்.<br><br>➢ வீடுகளில் அலங்காரத்துக்காக இருக்கும் | உள்நாட்டலுவல்கள் அமைச்சு,<br>பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,<br>உள்ளூராட்சி நிறுவனங்கள்,<br><br>மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு,<br><br>சுகாதார போசாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு,<br><br>அனைத்து அரசாங்க அதிபர்கள்,<br><br>பிரதேச செயலாளர்கள்,<br><br>பிரதேச சுகாதார | சமூக குழுக்கள், சனச குழுக்கள் நிறுவப்பட்ட கிராம அலுவலர் பிரதேசத்தில் மிகை அச்சுறுத்தலுள்ள கிராம அலுவலர் பிரிவுகளை நுளம்புகள் பெருகாத இடங்களாக மாற்றுதல் |

| | | | |
|---|---|---|---|
| தடாகங்களில் நுளம்புக் குடம்பிகளை உண்ணும் மீன்களை வளர்த்தல்.<br><br>➢ சமூக செயற்பாடாக, பணியாக வெற்று காணிகளை பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்துதல்.<br><br>➢ சுகாதார மருத்துவ அலுவலர் பிரிவுகளிலுள்ள மிகை அச்சுறுத்தல் வலயங்களை தொடர்ச்சியாக பரிசீலித்தல்.<br><br>➢ கிராம அலுவலர்கள் மிகை அச்சுறுத்தல் உள்ள பிரதேசங்களில் வாரமொரு தடவையும், ஏனைய பகுதிகளில் மாதமொரு தடவையும் கிராமிய குழுவில் இது தொடர்பாக கலந்துரையாட வேண்டும்.<br><br>அத்துடன், மிகை அச்சுறுத்தலுடைய பிரதேசங்களில் பிரதேச செயலாளர் தலைமையில் வாராந்தம் பிரதேச குழு கூட்டத்தை நடத்தி, டெங்கு ஒழிப்பு தொடர்பான முன்னேற்ற மீளாய்வு அறிக்கையை பொது சுகாதார பரிசோதகர் ஊடாக சமர்ப்பித்தல்.<br><br>➢ வாரமொரு தடவை அனைத்து சுற்றாடல்களிலும் உக்காத கழிவுகளை அகற்ற நடவடிக்கை எடுத்தல்.<br><br>➢ நுளம்பு பெருகும் இடங்கள் அல்லாத வீடுகளை கிராமிய குழு கூட்டத்தில் பாராட்டுதல். | சேவை பணிப்பாளர்கள் | | |

| நிர்மாணம் இடம்பெறும் சூழலில் டெங்கு நுளம்பு பெருகுதலை தடுப்பதற்கான திட்டம் | | |
|---|---|---|
| **செயற்பாடுகள்** | **பொறுப்பான நிறுவனங்கள்** | **அடைய வேண்டிய இலக்குகள்** |
| 1. டெங்கு ஒழிப்பு செயற்திட்டத்தை ஜுன் 01 ஆம் திகதியிலிருந்து தொடர்ச்சியாக அமுல்படுத்துதல்.<br><br>➢ முக்கிய கட்டிட நிர்மாண இடங்களில் சுகாதார மற்றும் பாதுகாப்பு அலுவலர் (ர்நயடவா யனெ ளுயகநவல ழுககஉைநச) ஒருவரை அல்லது நுளம்பு ஒழிப்பு விடயத்துக்கான அலுவலரை நியமித்தல்.<br><br>➢ கட்டிட நிர்மாணங்களில் நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களற்ற சூழல் நேய தரப்படுத்தலுக்கு உட்படுத்துதல். (உூம்): பீலி இல்லாத கட்டிடங்கள், மற்றும் நீர் தேங்காதவாறு நிர்மாணிக்கப்படும் மேல்மாடம், கொங்கிரீட், குளாய்கிணறு போன்றவை).<br><br>➢ டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் உள்ளதா என தொடர்ச்சியாக பரிசீலிக்க வேண்டும். (உூம்: போத்தல், டயர், பிளாஸ்ரிக், தாங்கிகள், பரல், இயந்திரங்கள் போன்றவை).<br><br>➢ செல்ல முடியாத இடங்களில் நீர் தேங்கி நின்றால் பிரதேச பொது சுகாதார பரிசோதகர் அல்லது சுகாதார மருத்துவ அலுவலரின் உதவியுடன் குடம்பி அழிப்பு மருந்துகளை விசிறுதல் மற்றும் தேவையாயின் புகையடித்தல்.<br><br>➢ அனைத்து நிர்மாண பணியாளர்களையும் சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருப்பதற்காக | உள்ளூராட்சி நிறுவனங்கள்,<br><br>மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு,<br><br>சுகாதார போசாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு,<br><br>வீட்மைப்பு, நிர்மாணத்துறை அமைச்சு, நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை<br><br>(ஊஐனுயு) | நிர்மாணம் இடம்பெறும் இடங்களில் சுகாதார மற்றும் பாதுகாப்பு அலுவலர் (ர்நயடவா யனெ ளுயகவல ழுககஉைநச) ஒருவரையோ, நுளம்பு ஒழிப்பு விடயத்துக்கான அலுவலரை நியமித்தல்.<br><br>நுளம்புகள் பெருகும் இடங்கள் இல்லாத நிர்மாண சூழல் |

| | | |
|---|---|---|
| தெளிவுபடுத்துதல் மற்றும் நுளம்பு வலை பயன்படுத்துமாறு ஆலோசனை வழங்குதல்.<br><br>➢ கழிவு முகாமைத்துவத்துக்கான நிலையான தீர்வுகளை வழங்குதல்.<br><br>- கழிவு பொருள் வகைப்படுத்தல் தொடர்பில் தெளிவுபடுத்துதல்.<br><br>- நிர்மாண சூழலில் பொலித்தீன் கொண்டு வருவதனை தடுத்தல்.<br><br>- கழிவு பொருட்களை குறைத்தல்.<br><br>- அகற்றப்படும் உக்கும், உக்காத கழிவுப்பொருட்கள் மற்றும் கழிவுநீரை சரியான முறையில் வெளியேற்றுதல்.<br><br>- கழிவுப்பொருள் வகைப்படுத்தல் உரிய முறையில் மேற்கொள்ளப்படுகிறதா என மேற்பார்வை செய்தல்.<br><br>➢ டெங்கு நோயை கட்டுப்படுத்தல் மற்றும் தடுத்தலுக்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை பெறுவதற்கு பிரதேச பொது சுகாதார பரிசோதகர் அல்லது சுகாதார மருத்துவ அலுவலரை சந்தித்தல்.<br><br>➢ டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் தொடர்பில் ஒரு மாதாந்த அறிக்கையை பிரதேசத்தின் சுகாதார வைத்திய அதிகாரிக்கு அனுப்புதல்<br><br>➢ அனைத்து முக்கிய கட்டிட நிர்மாணத் தளங்களையும் குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தில் பதிவு செய்தலும் மாதத்திற்கு ஒரு முறை அறிக்கையொன்றை உள்ளூராட்சி நிறுவனத்திற்கும் சுகாதார வைத்திய அதிகாரிக்கும் அனுப்புதல். | | |

| மீன்பிடி துறைமுகம் மற்றும் மீன்பிடி படகுகளில் டெங்கு நுளம்புகள் பரவுவதைத் தடுப்பதற்கான திட்டம் | | |
|---|---|---|
| **செயற்பாடுகள்** | **பொறுப்பு வகிக்க வேண்டிய நிறுவனங்கள்** | **எட்டப்பட வேண்டிய இலக்குகள்** |
| • மீன்பிடி துறைமுகம் மற்றும் மீன்பிடி படகுகளில் டெங்கு நுளம்புகள் பரவுவதைத் தடுத்தல்<br>✓ படகு உரிமையாளர்கள், பராமரிப்பவர்கள் மற்றும் பயன்படுத்துபவர்களுக்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் குறித்து தெளிவுபடுத்தல்.<br>✓ மீன்பிடித்துறை அமைச்சு அதிகாரிகளின் உதவியுடன் துறைமுக ஊழியர்களுக்கு அறிவூட்டுதல்.<br>✓ கைவிடப்பட்ட வள்ளங்கள் மற்றும் மீன்பிடி படகுகளை துறைமுகத்திலிருந்து அகற்றும்வரை அப்படகுகளில் நுளம்புகள் பெருகும் இடங்களை அகற்றுதல் மற்றும் பராமரிப்பதற்கு இலகுவான வகையில் தெரிவு செய்யப்பட்ட உரிய இடங்களில் வைத்தல்.<br>✓ வழங்கப்பட்டுள்ள கால எல்லையில் வள்ளங்கள் மற்றும் மீன்பிடி படகுகளை அகற்றுவதற்கு சட்ட ஏற்பாடுகளையும் முறைமைகளையும் வகுத்தல்.<br>✓ மீன்பிடி நடவடிக்கைக்காக எடுத்துச் செல்லும் பிளாஸ்டிக் பாத்திரங்கள் மற்றும் பொலித்தீன் வகைகளை கடற்கரைப் பகுதியில் வீசி எறிவதைத் தவிர்த்தல் மற்றும் அதனை கழிவு முகாமைத்துவம் செய்வதற்கு உரிய முறைமைகளைப் பின்பற்றுதல். | மீன்பிடி, நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சு | கைவிடப் பட்டுள்ள அனைத்து வள்ளங்கள் மற்றும் படகுகளை அகற்றுதல்<br><br>கடற்கரை பிரதேங்கள் மற்றும் துறைமுகங்களில் குப்பைகளை அகற்றுதல் |

| ஊடகங்களின் மூலம் டெங்குநோயைத் தவிர்ப்பதற்கான திட்டம் | | |
|---|---|---|
| **செயற்பாடுகள்** | **பொறுப்பு வகிக்க வேண்டிய நிறுவனங்கள்** | **எட்டப்பட வேண்டிய இலக்குகள்** |
| 01.டெங்கு நோய் ஒழிப்புக்காக ஊடகங்களின் மூலம் மேற்கொள்ளும் வினைத்திறன்மிக்க தொடர்பாடல்<br><br>➢ ஜுன் மாதம் 01 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் குறித்து அனைத்து செய்திப் பத்திரிகைகளிலும் விளம்பரங்களைப் பிரசுரித்தல் (பல்வேறு அமைச்சுகளினூடாக- உதாரணமாக: சுகாதாரம், கல்வி, சுற்றாடல்துறை அமைச்சுகள் மற்றும் உள்;ராட்சி நிறுவனங்கள் போன்ற)<br><br>➢ அனைத்து ஊடகங்களிலும் ஒரே நேரத்தில் ஒரே செய்தியைப் பிரசுரித்தல் மற்றும் அந்த நேரத்தில் அனைத்து மக்கள் மற்றும் அனைத்து தொழின்மையாளர்களையும் அச்செயற்பாட்டில் ஈடுபடுத்தல்.<br><br>➢ ஊடகங்களை மையப்படுத்தி மக்களை வலுவூட்டுவதற்காக குறுஞ்செய்திகளை வெளியிடுதல்.<br><br>➢ ஜுன் மாதம் 01 ஆம் திகதி முதல் மூன்று மாதங்களுக்கு அனைத்து அலைவரிசைகளினூடாகவும் தலைப்புச் செய்தியாக இதனைப் பிரச்சாரம் செய்தல்.<br><br>➢ ஊடகங்களுக்கு தெரியப்படுத்துவதற்காக தொழில்நுட்பக் குழுவொன்றை அமைத்தல் மற்றும் அவர்களைக் கொண்டு முன்மொழியப்பட்ட செயற்பாடுகள் குறித்து | நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சு, சுகாதார, போசனை, சுதேச வைத்தியத் துறை அமைச்சு, ஊடக நிறுவனங்கள் | அனைத்து ஊடகங்களின் ஊடாகவும் டெங்கு நோய் மற்றும் நுளம்புகள் பெருகும் இடங்கள் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தல் |

| | | |
|---|---|---|
| அறிவூட்டுதல்.<br><br>(உதாரணம்: காய்ச்சல் தொடர்பான வைத்தியசாலை அல்லது ஏனைய வைத்தியசாலைகளில் சிறுவர் மற்றும் உடல் நோய் குறித்த வைத்திய நிபுணர்கள், தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவிலுள்ள அனைத்து வைத்தியர்கள் மற்றும் ஏனைய பணிக்குழாம் மற்றும் சுகாதார கல்விப்பணிமனை அதிகாரிகள் இணைந்து ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தல்)<br><br>➢ ஊடகங்கள், வேலைத்தளங்கள், (நிர்மாண இடங்கள்) பாடசாலை மற்றும் சேவை நிலையங்களை நுளம்புகள் பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பது குறித்து தெளிவூட்டுதல்.<br><br>✓ கொங்ரீட் கூரைகள், வீட்டிலுள்ள மழைநீர் வடிந்தோடும் குழாய்கள் போன்ற நீர் தங்கி நிற்கக்கூடிய இடங்களைச் சுத்தம் செய்தல்.<br><br>✓ நீர் சேகரிக்கும் பாத்திரங்கள் மற்றும் தாங்கிகளை நுளம்புகள் உட்செல்ல முடியாதவகையில் மூடிவையுங்கள்.<br><br>✓ நீர் சேகரிக்கும் பாத்திரங்கள், தாங்கிகள், பூச்சாடிகள், பறவைகள் குளிக்கும் தடாகங்கள் போன்றவற்றிலிருந்து நீரை அகற்றி உட்பகுதியை நன்றாக சுத்தம் செய்யுங்கள்.<br><br>✓ நீர் தங்கியிருக்காதவாறு குப்பைகளை உரியமுறையில் வகைப்படுத்தி அகற்றுங்கள்.<br><br>✓ டயர்களில் நீர் தேங்கிநிற்க இடமளிக்க வேண்டாம். அவற்றை நீக்கிவிடுங்கள் உரிய முறையில் களஞ்சியப்படுத்துங்கள்.<br><br>➢ ஊடக நிறுவனங்களினூடாக சிறு தொலைக் காட்சி அறிவித்தல்கள் (துபைபெடநள) | | |

| | | |
|---|---|---|
| தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.<br>➢ தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கள ஆய்வுக்கான ஊடக பிரச்சாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல்.<br>➢ டெங்கு ஒழிப்பு தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை இலவசமாகப் பிரசாரம் செய்தல்.<br>➢ குறித்த வளாகங்களில் நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை பரிசோதனை செய்வதற்குரிய நேரங்கள் தொடர்பில் ஊடகங்களின் மூலம் பிரசாரம் செய்தல்.<br>(உதாரணம்: பாடசாலைகளில் வெள்ளிக்கிழமை 11.00 மணி முதல் 12.00 மணிவரை, நிறுவனங்கள் மற்றும் நிர்மாணப் பகுதிகளில் வெள்ளிக்கிழமை காலை, வீடுகள் மற்றும் சமய நிலையங்களில் ஞாயிற்றுக்கிழமை காலை) | | |

## சட்டதிட்டங்களும் மதிப்பீடும்

### நிறுவனங்கள் (அரச மற்றும் தனியார் நிறுவனங்கள்)

- பிரதேசத்தின் குறித்த சுகாதார வைத்திய அதிகாரிக்கு மாதாந்தம் ஒரு அறிக்கையை அனுப்புதல் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் அந்த இடங்களைக் கண்காணித்தல்.

### பாடசாலைகள்

- பாடசாலை டெங்கு ஒழிப்பு குழுவினால் நாளாந்தம் கண்காணித்தல்: அதிபருக்கு வாராந்தம் ஒரு அறிக்கையை வழங்குதல்.
- அனைத்து அதிபர்களும் மாதாந்த அறிக்கையை வலய பணிப்பாளர் மற்றும் குறித்த சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு வழங்குதல்.
- மாதத்திற்கொருமுறை அனைத்து பாடசாலைகளிலும் நுளம்புகள் பெருகும் நிலமைகுறித்த அறிக்கையொன்றை வலய பணிப்பாளருக்கு அனுப்புதலும் அந்த அறிக்கைகளின் தொகுப்பை கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைத்தலும்.

### வீடுகள்

- சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் குறித்த அறிக்கையை பிரதேசத்தின் தொற்றுநோய் வைத்திய அதிகாரிக்கு அனுப்புதல்.
- கிராம அலுவலர்கள், இடர் கூடிய பிரதேசங்களில் வாரத்திற்கொருமுறையும் ஏனைய பிரதேசங்களில் மாதத்திற்கொருமுறையும் அறிக்கையொன்றை கிராமிய குழுவுக்கு அனுப்புதல்.
- இடர்நிலைமைகூடிய பிரதேசங்களில் பிரதேச செயலாளர் தலைமையில் பிரதேச குழுவை வாராந்தம் கூட்டி டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வு அறிக்கையை மாவட்ட செயலாளருக்கு அனுப்பிவைத்தலும், மாவட்ட செயலாளரினால் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அவ்வறிக்கையை அனுப்பிவைத்தலும், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரினால் அவ்வறிக்கை டெங்கு ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணிக்கு அனுப்பிவைத்தலும்.
- மாதாந்தம் ஒரு அறிக்கை தொகுப்பை மாகாண தலைமை செயலாளரினூடாக ஜனாதிபதி செயலணிக்கு அனுப்பிவைத்தல்.

## நிர்மாணத் தளங்களில்

- டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் தொடர்பில் ஒரு மாதாந்த அறிக்கையை பிரதேசத்தின் சுகாதார வைத்திய அதிகாரிக்கு அனுப்புதல்
- அனைத்து முக்கிய கட்டிட நிர்மாணத் தளங்களையும் குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தில் பதிவு செய்தலும் மாதத்திற்கு ஒரு முறை அறிக்கையொன்றை உள்ளூராட்சி நிறுவனத்திற்கும் சுகாதார வைத்திய அதிகாரிக்கும் அனுப்புதல்.

## மீன்பிடித்துறைமுகங்கள் மற்றும் படகுகள்

- குறித்த மீன்பிடி துறைமுகப் பிரதேசங்கள் மற்றும் படகுகளில் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் தொடர்பில் மாதாந்த அறிக்கையை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியினால் பிரதேச தொற்றுநோய் வைத்திய அதிகாரிக்கு வழங்குதல்.

**நுளம்பு பரவும் இடங்களை கண்காணிப்பதற்குரிய சோதனை பட்டியல்**

| | |
|---|---|
| 1. நீரை சேமிக்கும் பெரல்கள் | 11. இயற்கையுடனானவை (இலையடிகள், மரப் பொந்துகள், மூங்கில் அடிக்கட்டை) |
| 2. நீரை சேமிக்கும் சீமெந்து நீர்த்தாங்கிகள் | 12. கழிக்கப்பட்டவை (உக்கும் சாதனங்கள்) |
| 3. நீரை சேமிக்கும் ஏனைய கொள்கலன்கள். (கேன்கள், பானைகள் ஆகியவை) | 13. கழிக்கப்பட்டவை (உக்காத சாதனங்கள்) |
| 4. கொன்க்ரீட் பாளங்கள் | 14. கழிக்கப்பட்டவை (மீளப்பாவிக்கும் சாதனங்கள்) |
| 5. டயர்கள் | 15. செல்லப் பிராணிகளுக்கு நீர் ஊட்டும் கிண்ணங்கள். |
| 6. அலங்கார மற்றும் மலர்ச்செய்கை பொருட்கள் (மலர்த் தொட்டிகள், சாடிகள், மீன்கள் இல்லாத தாங்கிகள், பறவை குளியல் சாதனங்கள்.) | 16. பயன்படுத்தப்படாத கழிவறை சாதனங்கள் (சிஸ்டர்ன் மற்றும் கொமோட்கள்) |
| 7. கிணறுகள் (ஆழமற்ற சிமெந்து கிணறுகள்) | 17. கூரைக் கால்வாய்கள் (இலைகளால் நிறைந்திருத்தல்) |
| 8. குழாய்க் கிணறுகள் | 18. நீர்க்குளங்கள் (மீன்கள் இல்லாத சீமெந்து நீர்க்குளங்கள் மற்றும் பாவிக்கப்படாத நீச்சல் குளங்கள்) |
| 9. குளிரூட்டி மற்றும் குளிர்சாதனங்களின் அடித்தட்டுகள் | 19. தற்காலிகமாக அகற்றப்பட்ட சாதனங்கள் (உடைசல் இடுப்பு, கூரை ஓடுகள், பிளாஸ்டிக் வகைகள் போன்றவை) |
| 10. மூடும் சாதனங்கள் (பொலித்தீன் சாக்குகள்) | 20. ஏனைய (ஈரமான தளங்கள், பூமிக்குச் செல்லும் பைப்புகள், கொங்ரீட் கான்கள், |

| | |
|---|---|
| | கொங்ரீட் துளைகள்) |

**களப் பரிசோதனைக்கான மாதிரிப்படிவம்**

அரச, தனியார் நிறுவனங்கள் / தொழிற்சாலை / வணக்கஸ்தலங்கள் மற்றும் பொது இடங்களில்
நுளம்புகள் பெருகும் இடங்களை இனங்காண்பதற்கான அவதானிப்புக் குறிப்பு படிவம்

திகதி: ………………..…………………. ஆரம்பிக்கப்பட்ட நேரம்: …………………………….. முடிவடைந்த நேரம்: …………...……………….

| | பெயர் | பதவி |
|---|---|---|
| சுகாதார வைத்தீய உத்தியோகத்தர் பிரிவு/உள்;ராட்சி அதிகாரப் பிரிவு | 1 …………………………… | …………………………………… |
| பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவு | 2 …………………………… | …………………………………….. |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | 3 …………………………… | …………………………………….. |
| நிறுவனத்தின் பெயரும் முகவரியும் | 4 …………………………… | …………………………………….. |

| நிறுவனத்தின் உட்புறத்திலும், வெளிப்பகுதியிலும் | அவதானிக்கப்பட்ட இடங்கள் | நுளம்புக் குடம்பிகள் காணப்படும் இடங்கள் (நுளம்புக் குடம்பிகள் காணப்படுமாயின் குறித்த இடங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடவும்.) | | | | | | | | | | | | | | | ஈரமான நுளம்புகள் பெருக்கக்கூடிய | உலர்ந்த நீருடன் கூடிய | சரி செய்யப்பட்ட மொத்த இடங்கள் | | பிரச்சினைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மற்றும் நீர் சேகரிக்கும் பாத்திரங்கள் | மழை நீர் வழிந்தோடும் குழாய்கள் | உண்ணும் மீன்களற்ற தடாகங்கள் | நீர் தேங்கி நிற்கும் | கொங்ரீட் தளங்கள் | டயர்கள் | மரத்துளைகள் | பாவிக்கப்படாத மலசலகூடங்கள் | குளிர்சாதனப் பெட்டி/.வாயுச்சீராக்கி | அகற்றப்பட்ட பாத்திரங்கள் (யு1) | பூச்சாடிகள் | வேறு (யு2) | குடம்பிகள் காணப்படும் மொத்த இடங்களின் எண்ணிக்கை | காண்கள் மற்றும் கழிவுக் குழிகள் — தெளிவான நீருடன் கூடிய | காண்கள் மற்றும் கழிவுக் குழிகள் — தெளிவான நீரற்ற | | | காணப்படும் இடங்கள் | நுளம்பு பெருக்கக்கூடிய இடங்கள் | |
| | அலுவலக வளாகம் | | | | | | | | | | | | | | | | | | | | |
| நிறுவனத்தின் உட்புறம் | தரை மாடி | | | | | | | | | | | | | | | | | | | | |
| | அடுக்குமாடிகள் | | | | | | | | | | | | | | | | | | | | |
| | இரண்டாம் மாடி | | | | | | | | | | | | | | | | | | | | |
| | மூன்றாம் மாடி | | | | | | | | | | | | | | | | | | | | |
| | நான்காம் மாடி | | | | | | | | | | | | | | | | | | | | |
| | ஐந்தாம் மாடி | | | | | | | | | | | | | | | | | | | | |
| | ஆறாம் மாடி | | | | | | | | | | | | | | | | | | | | |
| | ஏழாம் மாடி | | | | | | | | | | | | | | | | | | | | |
| | எட்டாம் மாடி | | | | | | | | | | | | | | | | | | | | |
| | வேறு கட்டிடங்கள் | | | | | | | | | | | | | | | | | | | | |
| | சமையலறை மற்றும் உணவுக்கூடம் | | | | | | | | | | | | | | | | | | | | |
| | கட்டிட நிர்மாணச் சூழல் | | | | | | | | | | | | | | | | | | | | |
| | மலசலகூட கட்டிடங்கள் | | | | | | | | | | | | | | | | | | | | |
| வெளியிடங்கள் | கழிவகற்றப்படும் சூழல் | | | | | | | | | | | | | | | | | | | | |
| | வாகனத் தரிப்பிடம் | | | | | | | | | | | | | | | | | | | | |
| | பூங்காக்கள் | | | | | | | | | | | | | | | | | | | | |
| | நீர்ச் சுத்திகரிப்பு பிரிவு | | | | | | | | | | | | | | | | | | | | |
| | பழுதடைந்த பொருட் களஞ்சியம் | | | | | | | | | | | | | | | | | | | | |

யு1 என பிளாஸ்டிக் கோப்பைகள், யோகட் கோப்பைகள், தயிர்ச்சட்டிகள், போத்தல்கள், விளையாட்டுப் பொருட்களின் பாகங்கள், பீங்கான் துண்டுகள், தகரப் பேணிகள் மரப்பெட்டிகள், வீசப்படும் பொலித்தீன்கள், பிளாஸ்டிக் உறைகள், நைலோன் பொருட்கள். பியர் டின் என்பவற்றைக் கருதுக.

யு2 என நீர் தேங்கும் மொட்டைமாடி, தற்காலிகமாக நீர் தேங்கும் இடங்கள், நீர் கசிவிற்காக பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் பாத்திரங்கள், அகற்றப்பட்ட ஓடுகள், உடைந்த கட்டிட பொருட்கள், சேதமடைந்த பொருட்கள், நிலக்கீழ் குழாய்கள், என்டனா கம்பிகள், உடைந்த மலசலக்கூட குழிகள், மழைக்காக பாவிக்கப்பட்ட பொலித்தீன் உறைகள், வளைந்த ஓரங்களை உடைய பாத்திரங்களை கருத்திற்கொள்க.

படிவத்தினை பூரணப்படுத்தும்போது நுளம்பு குடம்பிகள் காணப்படுமாயின் காணப்பட்ட இடங்களின் எண்ணிக்கையையும், இல்லாவிடின் ஓ புள்ளியையும் இடுதல்.